உ

கடவுள் துணை.

குருபாததாசர் அவர்களால் செய்தருளிய

திருப்புல்வயல்

குமரேச சதகம்.

இஃது

மணிமங்கலம்

ம-வடிவேலுமுதலியாரவர்களால்

பரிசோதித்து,

மதுரை-புதுமண்டபம் புத்தகஷாப்.

பி. கா. சி. கடைகாரியம்,

மு. கிருஷ்ணப்ப பிள்ளையவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

சென்னை பிரம்பூர்குயப்பேட்டை ௬௫-வது, கெம்பர் வீடு.

பொழிந்திடுவதும், நிலைமைதுசெழிப்பது மரசர்செங்கோல்புரியு நிலையுமாதவர்செய்தவமும், மறையோர்களாலே விளங்குமிவ்வுலகத்தின் மானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨

அரசரியல்பு.

குடிபடையிலபிமான மந்திராலோசனை குறிப்பறிதல்சத்தியவசனங், கொடைநித்தமவரவர்க்கேற்றமரியாதைபொறை தேடாத சதுருபாயம், படிவிசாரணையொடு ப்ரதானிதளகர்த்தரைப் பண்பறிந்தேயமைத்தல், பல்லுயிரெலாந்தன் னுயிர்க்குநிகரென்றே பறித்தகுற்றங்கள்களைதல், குடிபெறுதனக்குறுதி யானநட்பகமின்மைசுகுணமொடுகல்வியறிவு, தோலாதகாலமிட மறிதல்வினைவலிகண்டு துஷ்டநிக்கிரகசௌரியம், வடிவுபெறுசெங்கோ னடத்திவருமரசற்கு வழுவாதமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலை பேசிலாபஞ்சிறிது கூடிவரநயமுரைப்பார், கொள்ளுமொருமுதலுக்கு மோசம்வராதபடி குறுகவேசெலவுசெய்வார், வண்டப்புரட்டர்தா முறிதந்துபொன்னடகு வைக்கினுங்கடனீந்திடார், மருவுநாணயமுளோர் கேட்டனுப்பினுமவர் வார்த்தையிலெலாங்கொடுப்பார், கண்டெழுதிபத்துவர வினின்மயிர்பிளந்தே கணக்கிலணுவாகிலும்விடார், காசுவீணிற்செல விடாருசிதமானதிற் கனதிரங்கள்விடுவார், மண்டலத்தூடுகன வர்த்தகஞ்செய்கின்ற வணிகர்க்குமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௪

வேளாளரியல்பு.

நல்லதேவாலயம் பூசனைநடப்பதும் நாடோறுமழைபொழிவதும், நாடியதபோதனர்கண் மாதவம்புரிவது நவில்வேதவேதியரெலாம், சொல்லரியயாகாதி கருமங்கள்செய்வதுந் தொல்புவிசெழிக்குநலமுஞ், சுபசோபனங்களுங் கொற்றவர்கள்செங்கோ றுலங்குமனுநெறிமுறைமையும், வெல்லரியசுகிர்தமொடு வர்த்தகன்கொள்விலையும் விற்பனையுமதிகபுகழும், மிக்கவதிகாரமுந் தொழிலாளர்சீவனமும் வீரரணசூரவலியும், வல்லமைகள்சகலமும் வேளாளர்மேழியின் வாழ்வினால்விளைவதன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௫

பிதாக்கள்.

தவமதுசெய்தேபெற் றெடுத்தவன்முதற்பிதா தனைவளர்த்தவனொருபிதா, தடையாகவித்தையைச் சாற்றினவனொருபிதா சார்ந்த

ற்குருவொருபிதா, அவமறுத்தாள்இன்றவாசனொருபிதாநல்லவாபத்து வேளைதன்னி, லஞ்சலென்றத்துயர் தீர்த்துளோனொருபிதா வன் புளமுனேனொருபிதா, கவளமிடுமனைவியைப்பெற்றுளோனொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா, காசினியிலிவரைநிததம்பிதாவென்றுளங் கருதுவதுநீதியாகும், மவுலிதனின்மதியரவு புனைவிமலருதவுசிறுமத லையெனவருதருபரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமே வுகுமரேசனே. ௬

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந்தவறாதிருப்பவரிடத்தினிற் சார்ந்துதிருமாதிருக்குஞ், சந்ததந்திருமா திருக்கும்விடந்தனிற் றனதுபாக்கியமிருக்கும், மெய்த்துவருபாக்கிய மிருக்கும்விடந்தனில் விண்டுவின்கலையிருக்கும், விண்டுவின்கலைபூண்டிருக்கும்விடந்தனின் மிக்கானதயையிருக்கும், பத்தியுடனியதயை யுள்ளவரிடந்தனிற் பகர்தருமமிகவிருக்கும், பகர்தருமமுள்ளவரிடந்தனிற்சத்துரு பலாயனத்திறலிருக்கும், வைத்திசைமிகுந்திற லுள்ளவரிடத்தில்வெகு மன்னுயிர்சிறக்குமன்றே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௭

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க்கன்னங்கொடுத்தவர்களேதெய்வ மன்பாணமாணுக்கருக், கரியகுருவேதெய்வ மஞ்சினோர்க்காபத் தகற்றினோனேதெய்வமாம், காதலுறுகற்புடைய மங்கையர் தமக்கெலாங் கணவனேமிக்க தெய்வங், காசினியின்மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு காக்குமன்னவர்தெய்வமாம், ஓதரியபிள்ளைகட் டன்னைதந்தையர்தெய்வமுயர் சாதிமாந்தர்யார்க்கு, முறவின்முறையார்தெய்வம் விசுவாசமுள்ள பேர்க்குற்றசிவபத்தர்தெய்வம்,மாதவையினுற்சூத்திரர்க்குமறையோர்தெய்வம் வானவர்க்குத்தெய்வநீ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮

இவர்க்கிது நினைவெனல்.

ஞானநெறியாளர்க்கு மோக்ஷத்திலேநினைவு நல்லறிவுளோர்தமக்கு, நாடோறுந்தருமத்தி லேநினைவுமன்னர்க்கு ராச்சியந்தன்னிநினைவு, ஆனகாமுகருக்கு மாதர்மேலேநினைவு வஞ்சாததிருடருக்கிங், கனுதினங்களிலே நினைவுதன்வணிகருக் காதாயமீதுநினைவு, தானமிகுகுடியாளருக்கெலாம்வேளாண்மை தனினினைவுகற்பவர்க்குத், தகுகல்விமேனினைவு வேசியர்க்கினியபொருடருவோர்கண்மீதுநினைவு, மானபரனுக்குமரியாதைமேனினைவெற்குமாமுருகன்மீதுநினைவு,மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯

இவர்க்கிது வில்லையெனல்.

வேசைக்குநிசமில்லைதிருடனுக்குறவில்லைவேந்தற்குநன்றியில்லை, மிடியற்குவிலைமாதர் மீதுவங்கணமிலை மிலேச்சற்குநிறையதில்லை, ஆசைக்குவெட்கமிலைஞானியானவனுக்குளகமில்லைமூர்க்கன்றனக், கன்பில்லைகாமிக்கு முறையில்லைகுணமிலோர்க் கழகில்லைசித்தசுத்தன், பூசைக்குநவிலங்க சுத்தியிலையாவுமுணர் புலவனுக்கயலோரிலை, புல்லனுக்கென்றுமுசி தானுசிதமில்லைவரு புலையர்க்கிரக்கமில்லை, மாசைத்தவிர்த்தமதி முகதெய்வயானையொடு வள்ளிக்கிசைந்தவழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௦

இப்படிப்பட்டவ ரிவரெனல்.

நியாயநெறிதவறும லுலகபரிபாலன நடத்துமவனேயரசனும், ராசயோசனைதெரிந் துறுதியாகியசெய்தி நவிலுமவனேமந்திரி, நேயமுடனேதன் சரீரத்தையெண்ணாத நிர்வாகியேசூரனும், நிலைபெறு மிலக்கண மிலக்கியமறிந்துசொலுநிபுணகவியேகவிஞனும், ஆயதொருவாகடந் தாதுவினிதானது மறியுமதியோன் வைத்திய, னகமின்றிமெய்யுணர்ந் தைம்புலனொழித்துவிட் டவனேமெய்ஞ்ஞானியெனலாம், மாயவர்சகோதரி மனோன்மணிக்கன்பான வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

விரைந்தடக்கத்தகுவன விவையெனல்.

அக்கினியைவாய்முந்து துர்ச்சனரைவஞ்சமனை யாளைவளர்பயிர்கொள்களையை, யஞ்சாவிரோதிகளையனியாயமுடையோரை யகிர்த்திபப்பெண்களாப்பைக், கைக்கினியதொழிலாளி யைக்கொண்ட வடிமையைக் களவுசெய்யுந்திருடரைக், கருதியவிசாரத்தை யடக்கமில்பலிசையைக் கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாப்பிணியை யவையுதாசினத்தை வினைமூண்டிடுஞ்சண்டையை, விஷமேறுகோரத்தையன்றடக்குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினியகன்னிகுறவள்ளிதெய்வானையை மணஞ்செய்தபேரழகனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௨

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக் கொடுக்குந்தியாகிக டமக்குநற்பொருடுரும்பு, தன்னுயிரையெண்ணாத சூரனுக்கெதிராளி தளமெலாமொருதுரும்பு, பேரானபெரியருக் கற்பராதுகையினிற் பிரயோசனந்துரும்பு, பெரிதானமோட்சசிந் தனையுள்ளவர்க்கெலாம் பெண்போகமொருதுரும்பு, தீராதசகலமும் வெறுத்ததுறவிக்குவிறல் சேர்வேந்தனொருதுரும்பு, செய்யகலைநாமகள் கடாக்ஷமுள்ளோர்க்கெலாஞ் செந்தமிழ்க் கவிதுரும்பாம், வாராருமணிகொள்முலை வள்ளிதெய்வானையை மணம்புணரும்படிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௩

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக்குவதுதிரவிநிசிவிளக்குவதுமதி பார்விளக்குவதுமேகம், பதிவிளக்குவதுபெண் குடிவிளக்குவதரசு பரிவிளக்குவதுவேகம், இகல்விளக்குவதுவலி நிறைவிளக்குவதுநல் லிசைவிளக்குவதுசுதியூ, நீடம்விளக்குவதுகுடி யுடல்விளக்குவதுண்டி யினியசொல்விளக்குவதருள், புகழ்விளக்குவதுகொடை தவம்விளக்குவதறிவு பூவிளக்குவதுவாசம், பொருள்விளக்குவதுதிரு முகம்விளக்குவதுநகை புத்தியைவிளக்குவதுநூல், மகம்விளக்குவதுமறை சொல்விளக்குவதுநிசம்வாவியைவிளக்குவதுநீர், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௪

பிறப்பிட நன்மையால் நன்மைபெருமை.

சிங்காரவனமதி லுதிப்பினுங்காகமது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ, திரையெறியும்வாவியிற் பூத்தாலுமேகொட்டி செங்கஞ்சமலராகுமோ, அங்கானகத்திற்பிறந்தாலுமுயலான தானையின்கன்றாகுமோ, வாண்மையாகியநல்லகுடியிற்பிறந்தாலுமசடர்பெரியோராவரோ, சங்காடுபாற்கடல் பிறந்தாலுநத்தைதான்சாலக்கிராமமாமோ, தடமேவுகடனீரி லேவுப்புவிளையினுஞ் சாரசர்க்கரையாகுமோ, மங்காதசெந்தமிழ்க் குருமுனிக்குபதேசம் வைத்தமெஞ்ஞானகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

பலர்க்குப் பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியுமுதாரசற்குணமுடையகோவுமூருணியனீருங், கூட்டமிடுமம்பலத் தருநிழலுங் குடியாளர்விவசாயமும, கண்டவர்களெல்லாம் வரும்பெரும்சந்தியிற் கனிபலபழுத்தமரமும், கருணையுடனேவைத் திடுந்தண்ணீர்ப்பந்தலுங் காவேரிபோலூற்றமும், விண்டலத்துறைசந்தி ராதித்தகிரணமும் வெகுசனர்க்குபகாரமாம், வண்டமிர்கடப்பமலர் மாலையணிசெங்களப மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௬

தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமானதுதழலிலின் றுருகிமறிகினுந் தன்னொளிமழுங்கிடாது, சந்தனக்குறடுதான் மெலிந்துதேய்ந்தாலுமோ பொலிவெண்மை குறைவுறாது, போதவேகாய்ந்துநற் பால்குறுகினாலும் பொருந்துசுவை போய்விடாது, துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட்டாலுந் துலங்குகுணமொளியாதுபின், தொன்மைதருபெரியோர் மடிந்தாலுமவர்களதுதூயநிறைதவறுகுமோ, மங்களகல்யாணிகுற மங்கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௭

நரகில் வீழ்வோர்.

மன்னரைச்சமரில்விட் டோடினவர்குருமொழி மறந்தவர்கொலைப்பாதகர், மாதாபிதாவைநிந்தித்தவர்கள்பரதாரமருவித்திரிந்தபேர்கள், அன்னங்கொடுத்தபே ருக்கழிவையெண்ணினோ ரசடைக்கியவமைச்சர், ஆலயமிடித்தவர்கள் விசுவாசகாதகருந்தவர்தமைப்பழித்தோர், முன்னுதவியாய்ச்செய்த நன்றியைமறந்தவர் முகஸ்துதிவழக்குரைப்போர், முத்துசிவபத்தரை நடுங்கச்சினந்தவர்கண் முழுதும்பொய்யுரைசொல்லுவோர், மன்னொருவர் வைத்தபொருளபகரித்தோரிவர்கண் மாநரகில்வீழ்வரன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௧௮

சரீரசுகம்.

மாதத்திரண்டுவிசைமாதரைப்புல்குவதுமறுவருவிரோசனந்தான், வருஷத்திரண்டுவிசை தைலந்தலைக்கிடுதல் வாரத்திரண்டுவிசையாம், மூதறிவினொடுதனது வயதினுக்கிளையவொரு மொய்குழலுடன்சையோக, முற்றுதயிர்காச்சுபால் நீர்மோருருக்குநெய் முதிராவழுக்கையிளநீர், சாதத்திலெவ்வள வானாலும்புசித்தபின் ருகந்தனக்குவாங்கல், தயையாகவுண்டபி னுலாவலிவைமேலவர்சரீரசுகமாமென்பர்காண், மாதவகுமாரிசா ரங்கத்துதித்தகுற வள்ளிக்குகந்த கணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

யார்க்குமனுபோகம் விடாமை.

தேசுபெறுமேருகிர தக்ஷிணஞ்செய்துமதி தேகவடுநீங்கவில்லை, திருமாலுறங்கிடுஞ் சேடனுக்குவண் செறும்பகையொழிந்ததில்லை, ஈசன்கழுத்திலிரு பாம்பினுக்கிரைவேறிலா மலைவாயுவாகும், இனியகண்ணாகிவரும்பரிதியானவனுக்கிராகுவேகனவிரோதி, ஆசிலாப்பெரியோரிடத்தினிலடுக்கினு மமைத்தபடியன்றிவருமோ, அவரவர்களனுபோக மனுபவித்திடல்வேண்டு மல்லால்வெறுப்பதெவரை, வாசவனுமும்பரனை வரும்விசயசயவென்று வந்துதொழுதேத்துசரணா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௨௰

இதுவன்றிஇதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூரறிவிலாவாணிபங்குணமிலாமனைவியாசை, குடிநலமிலாநாடு நீதியில்லாவரசு குஞ்சரமிலாதவெம்போர், திருவிலர்மெய்த்திறமை பொறையிலாமாதவந்தியானமில்லாதநிஷ்டை, தீபமில்லாதமனை சொந்தமில்லாதவுடல் சேகரமில்லாதசென்னி, உருவிலாமெய்வளமை பசியிலாவுண்டிபுக ழாண்மையில்லாதவசனம், யோசனையிலாமந்திரி தைரியமிலாவீர முதவியில்லாதநட்பு, மருவிலாவண்ணமலர் பெரியோரிலாதசபை வைத்திருந்தென்னபயன், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௨௧

பகைப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகையுந்தவம் புரிதபோதனர்பகையுமரியகருணீகர்பகையும், அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையுமுட்பகையு மருளிலாக்கொலைஞர்பகையும், விரகுமிகுமூரிலுள் ளோருடன்பகையுமிகுவிகடப்பிரசங்கிபகையும், வெகுசனப்பகையுமந்திரவாதியின்பகையும்விழைமருத்துவர்கள்பகையும், வருமருவுகவிவாணர் பகையுமாசான்பகையு முறவின்முறையார்கள்பகையும், உற்றதிரவியமுளார்பகையுமந்திரிபகையு மொருசிறிதுமாகாதுகாண், வரநதியின்மதலையெனவினியசரவணமிசையில் வருகருணைசிறுகுழவியே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௨)

பேயெனப்படுவோரிவரெனல்.

கடனுதவிபேர்வந்து கேட்கும்வேளையின்முகங் கடுகடுக்கின்றபேயும், கனமருவுபெரியதனம் வந்தவுடனிருமாந்து கண்விழிக்காதபேயும், அடைவுடன்சத்துருவின்பேச்சைவிசுவாசித்தகப்பட்டுழன்றபேயும், ஆசைமனையாளுக்குநேசமாயுண்மைமொழியானதையுரைத்தபேயும், இடரிலாநல்லோர்கள் பெரியோர்களைச்சற்று மெண்ணாதுரைத்தபேயும், இனியபரிஞானநூலாசைகொண்டொருவர்க்கிடுக்கண்செய்திட்டபேயும், மடமனையிருக்கப் பரத்தையைப்புணர்பேயும்வகைபெற்றபேய்களன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨௩)

அவ்வவ்வினத்தி லுயர்ந்தவை.

தருவிற்சந்தான நதியினிற்கங்கை விரதத்தினிற்சோமவாரம், தகைபெருநிலத்தினிற் காஸ்மீரகண்டந் தபத்திற்சிதம்பரதலம், சீருலவுரிஷிகள் வசிஷ்டர்பசுவிற்காமதேனு முனிவரினாரதன், செல்வநவமணிகளிற் றிகழ்பதுமராகமணி தேமரிலம்போருகம், பேருலவுகற்பினிலருந்ததிகதித்திடு பெலத்தின்மருதம்யானையிற், பேசிலைராவதந் தமிழினிலகத்தியன் பிரணவம்மந்திரத்தில், வாரிதியிலேதிருப்பாற்கடல்கவட்டுநின் மகாமேருவாகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௪)

அவரவர்க்குப் பெலமாவன

அந்தணர்க்குயர்வேதமேபெலங்கொற்றவர்க்கரியசௌரியமேபெலம், ஆனவணிகர்க்குநிதியேபெலஞ்சூத்திரர்க் காயினேருழவேபெலம், மந்திரிக்குச்சத்துருபாயமேபெலம் நீதிமானுக்குநடுவேபெலம், மாதவர்க்குந்தபசு பெலமிடம்பார்க்குநிறை மானமிகுகற்பேபெலம், தந்திரமிகுத்தகனசேதகர்தமக்கெலாஞ் சாமிகாரியமேபெலஞ், சான்றவர்க்குப்பொறுமையேபெலம்புலவோர் தமக்குநிறைகல்விபெலமாம், வந்தனைசெயும்பூசை செய்பவர்கட்கன்புபெலம் வாலவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ()

இருந்தும் பயன்படாதவை.

தருணத்திலுதவிசெய் யாதநட்பர்பிறந்தெனபிறவாமலென்ன,
தராதரமறிந்துமுறை செய்யாதமன்னரைச் சார்ந்தென்னநீங்கிலெ
ன்ன, பெருமையுடனன்மையில் லாதவொருபிள்ளையைப் பெற்றெ
னபெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பி லாதவர்கணேசம்பிடித்தென
விடுக்கிலென்ன, தெருளாகமானமில் லாதவொருசீவனஞ் செய்தெ
னசெயாமலென்ன, தேகியெனவருபவர்க் கீயாதசெல்வஞ் சிறந்தெ
னமுறிந்துமென்ன, மருவிளமைதன்னிலில் லாதகன்னிகைபின்புவ
ந்தெனவராமலென்ன, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலை
மேவுகுமரேசனே (உசு)

உபகாரமில்லாதவை.

கடல்நீர்மிகுந்தென்ன வொதிதான்பெருத்தென்ன காட்டிலவு
லரிலென்ன, கருவேல்பழுத்தென்ன நாய்பால்சுரந்தென்ன சானின்
மழைபெய்துமென்ன, அடர்கழுதைலத்தைநிலமெல்லாங்குவித்தெ
ன்ன வரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்ன வாஸ்தானகோ
ழைபல வரியநூலோதிலென்ன, திடமினியபூதம்வெகு பொன்காத்
திருந்தென்ன திரணமிகுங்கரடிமயிர்தான், செறிவாகிநீண்டென்ன
வஸ்த்ரபூஷணமெலாஞ்சித்திரத்துற்றுமென்ன, மடமிகுந்தெவர்க்கு
முபசாரமில்லாத வம்பர்வாழ்வுக்குநிகராம், மயிலேறிவிளையாடு குக
னேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (உஎ)

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லினும் தன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொ
ளிக்கும்பதர், தக்கபெரியோர்புத்தி கேளாதபதர்தோழர் தம்மொடுக
ளிக்கும்பதர், பின்புகாணுவிடந் தன்னிலேபுரணிபல பேசிக்களிக்கும்
பதர், பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகே
ட்கும்பதர், பொன்பணமிருக்கவே போயிருக்கின்றபதர் பொய்ச்சா
ட்சிசொல்லும்பதர், புவியோர்நடத்தையையிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளியாக்கும்பதர், புண்புணரும்வேசையுடன் விபசரிக்கி
ன்றபதர் மனிதரிற்பதரென்பர்காண், மயிலேறிவிளையாடு குகனேபு
ல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (உஅ)

காணுவிடிற்றுயரப்படும் வகை.

இரவிகாணுவசன மாரிகாணுதபயி ரிந்துகாணுதகுமுதம், ஏந்த
ல்காணுநாடு கரைகள்காணுதோட மின்சொல்காணுவிருந்து, சுரபி
காணுதகன் றன்னைகாணுமதலை சோலைகாணுதவண்டு, தோழர்காணு
தேயர்கலைகள்காணுதமான சோடிகாணுதபேடு, குறவர்காணுதசபை
யோகிகாணுவறிஞர்கொழுநர்காணுதபெண்கள், கொண்டல்காணுத
றுவர்காணுவாழ்வு கோடைகாணுதகுயில்கள், வரவுகாணுத
பொலைப்புவிமீதில் வாழ்வுகாணுவிளமையாம், மயிலேறி
குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (உகூ)

வியாதிமூலங்கள்.

கல்லினான் மயிரினான் மீதூண்விரும்பலாற் கருதியவிசாரத்தினால், கடுவழிநடக்கையான் மலசலமடக்கையாற் பழங்கனியுண்ணலால், நெல்லினாலுமியினாலுண்ட பின்மூழ்கலால்நித்திரைகளில்லாமையால், நீர்ப்பகையினாற்பனிக் காற்றினாலுடனேதலா நீடுசருகிலையூறலால், மெல்லிநல்லார்க்கலவி யதிகமாம்விரும்பலால் வீழ்மலஞ்சிக்குகையினால், மிகுசுமைபெடுத்தலா லிளவெயிற்காய்தலான் மெய்வாடவேலைசெயலால், வல்லிரவிலேதயிர்கள் சரகாதியுண்ணலால் வன்பிணிக்கிடமென்பர்காண், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (௩௰)

செத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்குமுபகார மாம்வாவிகூடமுண் டாக்கினோர்நீதிமன்னர், அழியாததேவா லயங்கட்டிவைத்துளோ ரகரங்கள்செய்தபெரியோர், சனையொப்பிலாப்புதல் வனைப்பெற்றபேர்பெருது சமர்வென்றசுத்தவீரர், தரணிதனிநிலைநிற்க வென்னாளுமாறாத தருமங்கள்செய்தபேர்கள், கனவித்தைகொண்டவர்களோயாதகொடையாளர் காவியஞ்செய்தகவிஞர், கற்பினில்மிகுத்தவொரு பத்தினிமடந்தையைக் கடிமணஞ்செய்தோர்களும், மனிதர்கள்சரீரங்கள் போகினுஞ் சாகாத மனிதரிவராகுமன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௧)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறாதவறுமையோர் தீராதபிணியாளர் வருவேட்டகத்திலுண்போர், மனைவியைவழங்கியே சீவனஞ்செய்குவோர் மன்னுமொருராசசபையில், தூறாதநிந்தைசெய் துய்குவோர்சிவிகைகள் சுமந்தேபிழைக்கின்றபேர், தொலையாவிசாரத் தழுந்துவோர்வார்த்தையிற்சோர்வுபடலுற்றபெரியோர், வீறாகமனையா டனக்கஞ்சிவந்திடு விருந்தினையொழித்துவிடுவோர், வீமபுடன்சொல்லாத வ்வகாரமதுகொண்டு மிக்கசபையேறுமசடர், மாறாதகவியெலா முயிருடன்செத்தவ மாகியொளிமாய்வர்கண்டாய், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே. (௩௨)

சிறிதும் பயன்படாதவர்.

பதராகிலுங்கன விபூதிவிளைவிக்கும் பழமைபெறுசுவராகிலும், பலருக்குமறைவாகு மாரிமுஞ்சிடுமலம் பன்றிகட்குபயோகமா, மதகமிகுடாவெனினி லுனதுபுவிகாக்குமவன் கழுதையும்பொதிசுமக்கும், கல்லெனிற்றேவர்களு மாலயமுமாம்பெருந் தாணுபுற்றுமவர்மனையாம், இதமிலாச்சவமாகி லுஞ்சிலர்க்குதவிசெயு மிழிவுறுகுரங்காயினும், இரக்கப்பிடித்தவற் குதவிசெயுமவாறுசேர் லேற்றமாலிகைவிளக்கும், மதமதுமிகுபரம் பலேபாசனுட்கார மற்றொருவருக்குமுண்டோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௩)

உலுத்தரியல்பு.

திரவியங்காக்குமொரு பூதங்கள்போற்பணந் தேடிப்புதைத்து
வைப்பார், சீலநலமாகவுங் கட்டார்கணல்லமுது செய்துண்ணாறமுஞ்
செய்யார், புகல்வர்செய்தண்டந் தனக்கும்வலுவாகப் புருந்தி நடரு
க்குமீவார், புலவரைக்கண்டவுட னோடிப்பதுங்குவார் புராணிகர்க்
கொன்றுமுதவார், விரகறிந்தபிள்ளை சோறுகறிதினுமளவில் வெகு
பணஞ்செலவாகலால், விளையாடுமிழியனும் பிள்ளையேபிள்ளையென
மிகுச்செட்டி சொன்னகதைபோல், வரவுபார்க்கின்றதே யல்லாது
லோபியர்கண் மற்றொருவருக்கீவரோ, மயிலேறிவிளையாடு குகனேபு
ல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௪)

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங் கங்காசலத்திலுங் கமலாசனந்தன்னிலும்,
காகுத்தன்மார்பிலுங்கொற்றவரிடத்திலுங் காளியின்கூட்டத்திலும்,
நடமாடுமயிரிலும்பொய்வார்த்தைசொல்லாத நல்லோரிடந்தன்னிலு
ம், நல்லசுபலட்சண மிகுந்தமனைதன்னிலும் ரணசுத்தவீரர்பாலும்,
அடர்கேதனத்திலுஞ் சுயம்வரந்தன்னிலும் மருந்துளசிவில்வத்திலு
ம், அலர்தருகருப்பமலர் தனிலுமுராகத்திலு மதிகருணரூப, மடவா
ரிடத்திலுங் குடிகொண்டுதிருமாது மாறாதிருப்பளன்றே, மயிலேறி
விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௫)

மூதேவிவாழிடங்கள்.

சோரமங்கையர்கனித முறையார்கள்வாயினிற் சூதகப்பெண்க
ணிழலிற், சூளையிற்சூழ்லுரு புகையிற்களேபரஞ் சுடுபுகையில்நீச
ர்நிழலிற், காரிரவிலரசுநிழ லிற்கடாநிழலிலொடு கருதியவிளக்குநிழ
லில்,காமுகரினிஷ்டையில் லாதவர்முகத்திற் கடுஞ்சினத்தோர்சபை
யினில், ஈரமில்லாக்களர் நிலத்தினிலிராத்திரியி லிழியுமதுபானர்பா
லில், இலைவேல்விளாநிழலி னிதமழுக்கடைமனையி லேனநாயகரகத்
துள், வாரியமுரத்தூள் பெருக்குதூண்மூதேவி மாறாதிருப்பளென்
பர், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

திருந்தினுந்திருந்தான்.

கட்டிவெருவிட்டுச் செழுந்தேனைவார்க்கினுங் காஞ்சிரங்கைப்
புவிடுமோ, கழுதையைக்கட்டிவைத் தோமம்வளர்க்கினுங் கதிபெரு
ங்குதிரையாமோ, குட்டியரவுக்கமு தளித்தேவளர்க்கினுங் கொடு
விஷமல்லாதுதருமோ, குக்கநெடுவாலுக்கு மட்டையைக்கட்டினும்
கோணுமலேநிமிருமோ, ஒட்டியேகுருணிமை யிட்டாலும் நயமிலா
யோனிகண்ணாகிவிடுமோ, பறவுகனகற்பூர வாடைபலகூட்டினு மு
ள்ளியின்குணமாறுமோ, மட்டிகட்காயிரம் புத்திசொன்னாலுநன்மா
ர்க்கமறியாதைவறுமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு ம
லைமேவுகுமரேசனே. (௩௭)

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகை முகத்தினிலறியலா மாநிலப்பூடுகளெல்லாம், மழையினாலறியலா நல்லார்பொல்லார்தமை மக்களாலறியலாகும், கனமருவுசூரைச் சமரினாலறியலாங் கற்றவொருவித்துவானைக், கல்விப்பிரசங்கத்தினாலறியலாங் களைநடையினாலறியலாம், தனதகமுடைத்தது பளிங்கினாலறியலாஞ் சாதிசொல்லாலறியலாம், தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத் தாதுக்களாலறியலாம், வனசவிகசிதவதன பரிபூரணானந்த வாலவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௮)

குணமாறாமை.

குணமிலாதுஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டுட்படுத்திவிடலாம், கொடியபலவிஷநோய்க ளியாவையுமௌஷதமது கொடுத்துத்திருப்பிவிடலாம், உணர்விலாப்பிரமராக்ஷசிமுதற்பேய்களையுகந்துகூத்தாடிவிடலாம், உபாயத்தினாற்பெரும் புறவைக்குநற்புத்தி யுண்டாக்கலாமுயிர்பெறப், பிணமதையெழுப்பலா மக்கினிசுடாமற் பெரும்புனலெனச்செய்யலாம், பிணியையுமகற்றலாங் காலதூதுவரையும்பின்புவாவென்றுசொல்லலாம், மணலையுங்கயிறாய்த்திரிக்கலாங்கயவர்குண மட்டுந்திருப்பவசமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௧௯)

இத்தீக்குணத்தோ ரிவ்விலங்குபோல்வதெனல்.

தான்பிடித்ததுத்துடிப் பென்றுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர்குரங்கு, சபையிற்குறிப்பறிய மாட்டாமனின்றவர் தம்பயனிலாதமரமாம், வீம்பினாலெளியவரை எதிர்பண்ணிநிற்குமொரு வெறியற்குரைநாயாவார், மிகநாடிவருவோர்முகம்பார்த்திடாலோபர் மேன்மையில்லாதகழுதை, சோபமெலாடுபெரியோர் சபைக்குட்படுத்திடுந் தூங்கலேசண்டிக்கடா, ஆறுகள்நடக்கீதோர்க் கிடுக்கணைசெய்திடுந் துஷ்டனேகொட்டுதேளாம், மாம்பழந்தனைவேண்டி எந்நாளிலீசனைவலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௰)

அற்பர்வாழ் குணம்வேறுபடுதல்.

அற்பர்க்குவாழ்வுசற் றதிகமானால்விழிக் குயாவருருவுந்தோன்றிடா, தண்டிநின்றேநல்ல வார்த்தைகளுரைத்தாலு மவர்செவிக்கேறிடாது, புட்பகவிமானமேல் வருகினும்வாருமென் மொழியவும்வாய்வராது, மோதியேவாதம் பிடிப்புவந்ததுபோல முன்காலையகலவைப்பா, விற்பனமிருந்தபெரி யோர்செய்திசொன்னாலும் வெடுவெடுத்தேசிரிப்பார், விருதாபசத்துவப் பேயதுசவுக்கடி விழும்போதுதீருமென்பார், மற்புயத்தணிநீப மாலையணிலோலனே மார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

இத்தீங்குளோரிக்கோள் போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்திகேளாதபிள்ளையேயோவஷ்டமச்சனியாகுவான், அஞ்சாமலெதிர்பேசி நிற்குமனையாள்வாக்கி லங்காரகச்சென்மமாம், தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகளோவடிமை சந்திராஷ்டகமென்னலாம், தன்பங்குதாவென்று சபையேறுதம்பியோ சார்ந்தசன்மச்சூரியன், கன்னயமிலாதவஞ் சனைசெய்ததமையன்மூன் றாமிடத்தில்வியாழம், நாடோறும்விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்களெனலாம், வன்னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்கு மந்திரமுரைத்தகுருவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௨)

நல்வினைஞ் சேர்பயன்.

சந்தனவிருட்சத்தை யண்டிநிற்கின்றபல தருவுமவ்வாசனைதரும், தங்கமகமேருவை யடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும், பந்தமிகுபாலுடன் விளாவியதணீரெலாம் பால்போனிறங்கொடுக்கும், படிகமணிகட்குளே நிசர்க்கின்றவடமுமப் படியேகுணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக் கல்லைத்தடித்திட லடித்ததும்பசுமையாகும், ஆனபெரியோர்களோடு சகவாசமதுசெயி லவர்கள்குணம்வருமென்பர்காண், மந்தரநெடுங்கிரியின் முன்கடல்கடைந்தவரிமருகமெஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௪௩)

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடிசூடுவ திருக்கரகுராமன்முனருங்காடுரைத்ததென்ன, அண்டரெல்லாமமுத முண்டிடப்பரமனுக் காலம் லபித்ததென்ன, வென்றிவருதேவர்சிறை மீட்டக்களவில்வே டிச்சிலைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்குமய னுக்கொருசிரம்போகி வெஞ்சிறையிலுற்றதென்ன, என்றுமொருபொய்சொலா மன்னவன் விலைபோனதென்னகாண்வல்லமையினால், எண்ணத்தினாலொன்றும் வாராதுபரமசிவ னைத்தனப்படிமுடியுமாம, மன்றுதனிநடனமிடுங்கங்காதரன் பெற்ற வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௪)

பெரியோர்வாக்கிய பரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரி பாலனஞ்செய்தவன் தசரதகுமாரராமன், தமையனருள்வாக்கிய பரிபாலனஞ்செய்தோர் தருமனுக்கிளையநால்வர், சிந்தையிலுணர்ந்துகுரு வாக்யபரிபாலனஞ் செய்தவனரிச்சந்திரன், தேகியென்றோர்க்கில்லை யெனுவாக்கியபாலனஞ் செய்தவன்றுனகர்ன்னன், நிந்தைதவிர்வாக்கியபரி பாலனஞ்செய்தவனீள்பெலமிகுந்தவனுமான், நிறைவுடன்பத்தாவின் வாக்கியபரிபாலனநிலத்தினனளாயினிசெய்தாள், மந்தைவழிகோயில்தள மூங்குலவுதும்பிமுகன் மகிழதறவுகந்ததுணைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௫)

முயற்சியின்மிக்கதூழெனல்.

வங்காளமேபுகினும் வாருகோலொருகாசு மட்டன்றி யதிகமாமோ, வானேறியுயரப் பறந்தாலும்ஊர்க்குருவி வண்ணப்பருந்தாகுமோ, கங்காசலந்தனின் மூழ்கினும்பேச்சுரைக் காய்நல்ல சுரையாகுமோ, கடலுக்குண்ணுழியை யமுக்கியேமொண்டிடிற் காணுமோநாழிதான், ஐங்காதமோடினுந் தன்வினை கடன்றோ டடையலாம்நீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலும்வெகுதொலைகள்சுற்றினுமமைத்தபடியன்றிவருமோ, மங்காதசெந்தமிழ்கொண்டுநக்கீரர்க்கு வந்ததுயர்தீர்த்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௬)

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமு மிராவணன்றிறமுங் துடுக்கான கஞ்சன்வலியும், துடியானவிரணியன் வரப்பிரசாதங்களுந்தொலையாதவாலிதிடமும், பாரமிகுதுரியோதனதிநூற்றுவரது பராக்கிரமமதுகைடவர், பாரிப்புமாபெலியினுண்மையுஞ்சோமுகன் பாங்கினுறு வல்லமைகளும், ஏரணவுகீசகன் கனதையுந்திரிபுரரெண்ணமுக்கந்தனெழிலும், இவர்களதுசம்பத்து நின்றுதோவவரிடும்பாலழிந்தவன்றோ, மாரனைக்கண்ணு லெரித்தருள்சிவன்றந்த வரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௭)

நட்புநிலை.

மாமதியின் முதலானததுதேய வழிந்தேய்ந்து வளருமப்போதுவளரும், வாவிதனிலாம்பல்கொட் டிகளதனிநீர்வற்றி னதுவற்றிடும்பெருகிலுயரும், பூமருவுபதல்பூடு கோடையிற்றீய்ந்திடும் பொங்குகாலந்தழைக்கும், புண்டரிகமிரவிபோ மளவிற்குவிந்திடும் போதுதயமாகின், மலருந்தேகமுடலிளைக்கினுயிர் கூடவுமிளைக்குமதுதேறிலுயிருஞ்சிறக்கும், சேர்ந்தோர்க்கிடுக்கணது வந்தாலுநல்லோர்சினேகமப்படியாகுமே, வானகருப்பமதயானை முகனுக்கிளைய வாலகுருபரவேலவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௮)

கைப்பலனுமவை.

பருவத்திலேபெற்ற சேயும்புரட்டாசி பாதிசம்பாநடுகையும், பலமினியவாறுகனி வாழைவால்போலவே வயிர்கொண்டவருகரும்பு, கருணையொடுக்க நாணயமுள்ளோர்கையினிற் கடனிட்டுவைத்தமுதலும், காலமதுநேரிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடுகல்வியும், விருந்தாசனைக்கண்டு பழகியசினேகமும் விவேகிகட்குபகாரமாம், வீணலவிவையெல்லாங்கைப்பலனதாகவயி விர்த்தியாய்வருமென்பர்காண், மருவுலாவிபரீபமாலையும்புனைமார்பனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௯)

சமயத்துக் குதவாதவை.

கல்லாதுபுத்தகந் தனியெழுதிவீட்டினிற் கட்டிவைத்திடுவித்
தையும், காலஞ்சரூர்க்குதவ வேண்டுமென் றன்கையிற்கொடுத்தபொ
ருளும், இல்லாளைநீக்கியே பிற்பாரிசதமென் றிருக்கின்றகுடிவாழ்க்
கையும், ஏறுமாறாகவே தேசாந்தரம்போ யிருக்கின்றபிள்ளைவாழ்வு
ம், சொல்லானதொன்றும் வனமானதொன்றுமாச் சொல்லும்வஞ்ச
கர்நேயமும், சுகியமாயுண்டென் றிருப்பதுவெலாந் தருணத்திலுத
வாதுகாண், வல்லானகொங்கைமட மாதுதெய்வானைகுற வள்ளிபங்
காளனேயா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரே
சனே. (௫௰)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின்வாயினி லகப்பட்டதவளையுமாலைவாயிற்கரும்பும், அ
ரிதானகப்பலிற் பாய்மறக்காற்றினி லகப்பட்டுமெலிகாக்கையும், நா
டறியவேதாரை வார்த்துக்கொடுத்தது நமன்கைக்குளானவுயிரும்,
நாமாகவேயணைகடந்திட்டவெள்ளமும் நாய்வேட்டைபட்டமுசலு
ம், தேடியுண்பார்வைக்கு ளானமனையுந்து திரள்கொடுங்கோலரசர்
கைதந்தருபொருளுந் திரும்பிவாரரதென்பர்காண், மாடமிசையன்
னக்கொடுத்திரள்கொள்சோணாடு வாழவந்திடுமுதல்வநீ, மயிலேறிவி
ளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௧)

இதினுமிதுநன்றென்பவை.

கடுகடுத்தாயிரஞ் செய்குவதிலின்சொலாக் களிகொண்டழைத்
தனன்று, கனவேள்வியாயிரஞ் செய்வதிற்பொய்யுரை கருத்தொடு
சொல்லாமைநன்று, வெடுக்கின்றதோரவி வேசியறவினில் விவேகி
யொடுபகைமைநன்று, வெகுமதிகளாயிரஞ் செய்வதிநரைக்காசுவே
ளைகண்டுதவுநன்று, சடுதியிற்பக்குவஞ் சொல்லுங்கொடைக்கிங்கு
சற்றுமிலையென்னனன்று, சபபத்துடன்பிணியின் மெலிகுவதிநோ
யற்றதாரித்திரிய மிகநன்றுகாண், மடுவினிற்கரிபோல மென்ன வந்த
ருள்செய்தமால்மருகனனமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வ
யனீடு மலைமேவுகுமரேசனே. (௫௨)

பலகூடினும் ஒன்றற்கீடாகாதவை.

தாரகைகளொருகோடி வானத்திருக்கினுஞ் சந்திரர்க்கீடாகு
மோ, தாருவிற் கொடிதொணிகள் பலகூடினுமொரு தம்பட்டவோ
சையாமோ, கோரமிகுபன்றியின் குட்டிபலகூடினொருகுஞ்சரக்கன
றாகுமோ, கொட்டிமலர்வாவியிற் பலகூடினுமொரு கோசகமலராகு
மோ, பாரமிகும்மாலைகள்பலகூடினுமொருபைம்பொன மகமேருவா
மோ, பன்னிலைப்பிள்ளைக ளனேகம்பிறந்துடனிற் பண்ணொருவனுக்கு
நிகரோ. வாரணக்கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில வடிம்வேல
ணிந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகு
மரேசனே. (௫௩)

அருமையறிதல்.

மண்மாலையருமையைப் புனைபவர்களேயறிவர் மட்டிக்குரங்கறியுமோ, மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவளன்றோ, கணவருடையருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவளறிவளோ, கருதுமொருசந்திபின்பாண்டமென்பதைவருங்களவானநாயறியுமோ, குணமானகிளியருமை தனைவளர்த்தவரறிவர் கொடியபூனையுமறியுமோ, குலவுபெரியோரருமைநல்லோர்களேயறிவர் கொடுமூடர்தாமறிவரோ, மணவாளநீயென்று குறவள்ளிபின்றொடர வணமூடுதமுழவுமழகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ருச)

தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற்சஞ்சல நுண்டொருவரணுகாமல் வன்முதலையங்கிருக்கும், மலையினிற்றேனுண்டு சென்றொருவர்கிட்டாமல் மருவியதில் வண்டிருக்கும், நெடுமைதிகழ்தாழைமல நுண்டொருவரணுகாம நீங்காதமுள்ளிருக்கும், நீடுபலசந்தன விருக்ஷமுண்டணுகாதநீளரவு சூழ்ந்திருக்கும், குடிமல்கிவாழ்கின்றவீட்டினிற்செலாது துர்நாய்களங்கிருக்கும், கொடுக்குந்தியாகியுண்டிடையூறுமேகங்கொடும்பாவியுண்டுகண்டாய், வடுமையுங்கடுமையும் பொருவுமிருகண்ணிகுறவள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுலவயனீடு மலைமேவுகுமரேசனே. (ருரு)

கணிகையரிழிவு.

தேவதாசிகள்வீடு சந்தைப்பெரும்பேட்டை சேர்ந்திடுபடுக்கைவீடு, தெருவாசல்கட்டிபொது வம்பலமுடுத்ததுகில் செய்யசூதாடுசாலை, மேவலாகியசொங்கை கையாடுதிரள்பந்து விழிமனங்கவர்தூண்டலாம், வாலாகியவல்குலோ தண்டம் வாங்குமிடமதிகபடமாமனதுகல், அமிர்தவாயிதழ்சித்திர சாலையெச்சிற்குழியவர்க்காசைவைக்கலாமோ, மாவடிவுகொண்டே யொளித்தவொருசூரனை வதைத்தவடிவேலாயுதா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ருசா)

கலிகாலக்கொடுமை.

தாய்புத்திசொன்னால் மறுத்திடுங்காலமுயர் தந்தையைச்சீறுங்காலம், சற்குருவைநிந்தைசெய் காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாதகாலம், பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டிவையினுங் கேட்கின்றகாலநற் பெரியோர்சொல்கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன் சிறுமையுறுகாலமிகு சிறியவன் பெருகுகாலம், செருவில்விட்டோடினோர் வரிசைபெறுகாலம்வசைசெப்புவோர்க்குதவுகாலம், வாய்மதமபேசிவிடுமனியாயகாரர்க்குவாய்த்தகலிகாலமையா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ருஎ)

அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுறச் சபையின்மேல்வட்டமாய்க் காணவைப்போன்பிதாவாம், கற்றுணர்ந்தேனது புகழுறப்பிதாவைப்பிரகாசஞ் செய்வோன்புத்திரன், செல்வமிகுகணவனைதெய்வமென்றனுதினஞ் சிந்தைசெய்பவள்மனைவியாம், சினேகிதன்போலவேயன்புவைத்துண்மைமொழி செப்புமவனேசோதரன், தொல்வளமிகுந்தநூற் கரைதெரிந்துறுதிமொழி சொல்வனேகுரவனும், சொன்னநெறிதவறுமல் வழிபாடுசெய்துவரு அய்யனேயினியசீஷன், வல்விரகமிஞ்சுசுர குஞ்சரியுடன்குறவர் வனசிறைமணந்தண்ணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௮)

சிறுமையிற்பெருமை.

சேற்றிற்பிறந்திடுங் கமலமலர்கடவுளது திருமுடியின்மேலிருக்கும், திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத்தரசனது தேகத்தின்மேலிருக்கும், போற்றியிடுபூச்சியின் வாயினூல்பட்டென்று பூசைக்குநேசமாகும், புகலரியவண்டெச்சிலானதேன்தேவர்கொள் புனிதவபிஷேகமாகும், சாற்றியபுலாலொடு பிறந்தகோரோசனை சவாதுபுழுகனைவர்க்குமாம், சாதியீனத்திற் பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ, மாற்றிச்சுரத்தினை விபூதியாலுடல்குளிர வைத்தமெய்ஞ்ஞானமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௯)

செய்யத்தகாதவை.

தானுசரித்துவரு தெய்வமிதுவென்றுபோய்ச்சத்தியஞ்செயில் விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென்றுமுத்தந் தனைக்கொடுத்தாலதுசுடும், ஆனாலுமேலவர்கண்மெத்தவுந்தனதென் றடாததுசெயிற்கெடுதியாகும், ஆனைதான்மெத்தப்பழக்கமானாலுஞ்செயாதுசெய்தாற்கொன்றிடும், தீனையினிதென்று மீதூண்விரும்பினாற்பீடைகளேதரும், செகராசனுவென்ன வேலாதகாரியஞ்செய்தான்மனம்பொறார்காண், வானாடுபுகழுமொரு சோணாடுதழையவென் வந்தவதரித்தமுதலே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௰)

நடுவுநிலைமை.

வந்தவிவகாரத்தி லினியபரிதானங்கள் வருமென்றுநேசமென்றும், வன்பகைஞரென்றுமயலோரென்றுமிக்கதன வானென்றுமேழையென்றும், இந்தவகையைக்குறித் தொருபக்ஷபாதமோ ரெவ்வளவுரைத்திடாமல், எண்ணமுடனேலிகித புத்தியொடுசாக்ஷிக்குமேற்கச்சபாசமதமா, முந்தவிருதலையுஞ் சமன்செய்தகோல்போன்மொழிந்திடிற்றர்மமதுதான், முனைவிமனுடன்பாதிமிருகந்தனக்கென்று முன்றருமர்சொன்னதலவோ, மைந்தனெனதன்றமை மூலப்பால்

கொடுத்திடவளர்ந்தருள் குழைந்தவடிவே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௧)

பக்ஷபாதம்.

ஓரவிகவாரமாய் வந்தவர்முகம்பார்த் துரைப்போர் மலைக்குரங்காம், உயர்வெள்ளெருக்குடனீ முளைத்துவிடுமவரில்ல முறையுமூர்பாழ்நத்தமாம், தாரணியிலிவர்களில நெல்லியிலைபோலுருகும்சமானமாவெழுபிறப்பும், சந்ததியிலாதுழல்வ ரவர்முகத்தினின்மூத்த தையலேகுடியிருப்பாள், பாரமிவரென்றுபுவி மங்கையு நடுங்குவள்பழித்ததுர்மரணமாவார், பகர்முடிவிலேரவுர வாதிநரகத்தனுபவிப்பரெப்போதுமென்பார், வாரமுடனருணகிரிநாதருக்கநுபூதி வைத்தெழுதியருள்குருபரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௨)

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

கொங்கையில்லாதவட் கெத்தனைப்பணியுடைமை கூடினும்பெண்மையில்லை, கூறுமிறைகல்வியில் லாமலெத்தனைகவிதை கூறினும்புலமையில்லை, சங்கையில்லாதவர்க்கெத்தனைவிவேகந் தரிக்கினுங்கனதையில்லை, சட்சுவைபதார்த்தவகை யிற்றாலுநெய்யிலாச் சாதமுந்திர்ப்தியில்லை, பங்கயமிலாமலெத் தனைமலர்கள்வாயிற் பரித்துமேன்மையில்லை, பத்தியில்லாமல்வெகு நியமமாயர்ச்சனைகள் பண்ணினும்பூசையில்லை, மங்கையரிலாமனைக் கெத்தனையருஞ்செல்வம் வரினுமில வாழ்க்கையில்லை, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௩)

அளவுபடாதவை.

வாரியாழத்தையும்புனலெறிபமணல்களையு மானிடர்கள்சனனத்தையும், மன்னவர்கணினைவையும் புருஷர்யோகங்களையும்வானிலுயர் நீளத்தையும், பாரிலெழுமணலையும் பலபிராணிகளையும் படியாண்டமன்னவரையும், பருபதத்தின்னிசையு மீசுரச்செயலையும் பனிமாரிபொழிதுளியையும், சீறியதமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும், தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடுமோ, வாரிசமடந்தைகுடிகொண்டநெடுமாலுக்கு மருகனே வந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௪)

பிறர்மனைநயத்தல்.

தந்தாரமின்றியே பரதாரமேநினைவு தனைவைத்தகாமுகர்க்குத், தயையில்லைநிசமில்லை வெட்கமிலைசமரினிற் றைரியஞ்சற்றுமில்லை, அந்தாரமில்லைதொடர் முறையில்லைநிலையில்லை யறிவில்லை மானமில்லை யரமில்லை நிதியில்லை, யிரவினிற்றனிவழிக்கிச் சமோமன திக்கவில்லை நாதார்ந்தசனமில்லை யினமில்லை பெருக்குகட்பில்லை கனதையில்லை, நயமில்லையிளமைதனின் வலிமையில்லைமுத்திபெறு ஞானமிலையென்

பர்கண்டாய் மந்தாரபரிமள சுகந்தாதிபுனையுமணி மார்பனேயருளாளனே,மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

மானம்விடாமை.

கனபாரமேறிற் பிளந்திடுவதன்றியே கற்றூண்வளைந்திடாது, கருதலர்களாலுடைந்தாலுமுயிரளவிலே கன்பறினமுறியான, தினமோரிடுக்கண்வந் தற்றாலுமவ்வங்கைதோல் சீவனளவிற்கொடாது, திரமானபெரியோர் சரீரங்கள்போகினுஞ் செப்புமுறைதவறிடார்கள்,வனமேறுகவறிமா னுயிர்போகுமளவுந்தன் மயிரினொன்றுங்கொடாது, வாராதவாபத்து வருகினுங்கற்புடைய மாதர்நிறைதவறிடவாள், மனதாரவுனதடைக்கலமென்றனற்கீரற்கு வஞ்சிறைதவிர்த்த முருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

திருவருட்சிறப்பு.

திருவருள்கடாட்சமுண்டானலெவர்க்குஞ் சிறப்புண்டுசேனதையுண்டு, சென்றவழியெல்லாம் பெரும்பாதையாய்விடுஞ் செல்லாதவார்த்தைசெலலும், பொருளொறுதுரும்பு மரியாதைதாஞ்செல்வமோபுகழ்பெறுக்காறுபோலாம், புவியின்முன்கண்டுமதியாதபேர்பழகினவர்போலவேநேசமாவார், பெருமையொடுசாதியிலுயர்ச்சிதருமனுதினம் பெரும்பிரதிஷ்டையுண்டாம், பிரியமொடுபகையாளிகூடவுறவாகுவான பேச்சினிற்பிழைவராது, வருமெனநினைத்தபொருள கைகூடிவருமதிகவல்லமைகணமிகவுமுண்டாம், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௭)

நட்புநிலை.

கதிரவனுதிப்பதெங்கே நளினமெங்கேகளித்துளமலர்ந்ததென்ன, கார்மேகமெங்கே பசுந்தோகையெங்கே கருத்தினட்பானதென்ன, மதியமெங்கேபெருங் குமுதமெங்கேமுகமலர்ந்துமகிழ்கொண்டதென்ன, வல்லிரவுவிடிவதெங்கேகோழியெங்கே மகிழ்ந்துகூவிடுதலென்ன, நியாரங்கேயிருந்தாலுமவர்களொடு நேசமொன்றுயிருக்கும், நீதிமிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவர் நிறைபக்ஷமாவார்கள்காண், மதிலுடனகோபுரமும் வாவியும்புடைசூழ மருவுசோணாட்டதிபனே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

காலமறிதல்.

காலம்பகர்காலம் வென்றிடுங்கூகையைக்ககமுடியரசர்தாமும், கருதுசயகாலமது கண்டந்தவேளையிற் காரியமுடித்துவிடுவார், மேகமுங்கார்கால மதுகண்டுபயிர்விளைய மென்மேலுமாரிபொழியும், மிககானரிவ்வுளோர் வருதருணகாலதனின் மிடியாளருக்குதவுவார், நாகரிகமுறுகுயில் வசந்தகாலத்திலே நவமென்கடந்துகூவும், நல்லோர்க்குற்றதைப்பதராமலந்நாளையின்முடிப்பர்கண்டாய், வாகைபகாலைகன் மலைபுல்லெனுமுகவாடிகை நிசமல்லவோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௬௯)

இடனறிதல்.

தரைதனிலோடுதேர் நீள்கடலிலோடுமோ சலதிமிசையோடுகப்பல், தரைமீதிலோடுமோ தண்ணீரிலுநமுதலை தன்முனே கரிநிற்குமோ, விரைமலர்முடிப்பரமர் மேனியரவினையெல்லை மிகுகருடனுலாகுமோ, வேங்கைகளிருக்கின்ற காடுகளிலஞ்சாமல் வேறொருவர் செல்லவசமோ, துரைகளைப்பெரியோரை யண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்னசெய்யும், துணைகண்டுசேரிட மறிந்துசேரென்றளவைசொன்னகதைபொய்யல்லவே, வகையூதுமாயனை யெடுத்தலாற்பஞ்சவர்கள் வன்போர்செயித்ததன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௭௰)

யாக்கைநிலையாமை.

மனுநன்மாந்தாதாமுதலானவர்களெல்லாரு மண்மேலிருந்துவாழ்ந்து, மடியாதிருந்தபே ரில்லையவர்தேடியதை வாரிவைத் தவருமில்லை, பணிதன்னைநம்பியேயேர்பூட்டுநதையென்ன பாழானவுடலைநம்பிப், பார்மீதிலின்னம்வெகு நாளிருப்போமென்று பலகோடி நினைவையெண்ணி, அநீதமாய்விருதாவின் மாய்வதேயல்லாம லன்பாக நின்றதயர்ச்சித்து, முத்திபெறல்வேண்டுமென் றெண்ணுர்களாசைவலையிற்சுழலுவார், வனிதையர்கள்காமவிகாரமேபகையாகுபகையாகு மற்றமொருபகைமையுண்டோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௧)

வெட்கத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலே மருகன்வந்திடுமளவின் மேன்மேலுமுபசரித்து, விருந்துகள்சமைத்துநெய் பாற்றயிராபதார்த்தவகை வேண்டுவவெலாமமைப்பார், ஊட்டமிருவர்க்கவகை செய்திடுவர்தைலமிட்டுறுதியாய்முழுகிவிப்பார், ஓயாதுதின்னவே பார்க்கிலேகொடுத்திடுவருற்றநாளுலாகிலோ, நாட்டமொருபடியிறங்குவதுபோன்மரியாதை நாளுக்குநாள்குறைவுறும், நகைசெய்வர் மைத்துனர்க ளுவர்பார்போவென்று நாணமண்மாமிசொலுவாள், வாட்டமனையாளொரு துரும்பாய்மதிப்பவன் மட்டியிலுமட்டியன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௨)

செல்வநிலையாமை.

ஓடமிடுமிடமது மணற்றிடுஞ்சுமிட முகமோடமிகவேநடக்கும், உற்றதோராட்டின்மடு மேடாகுமேடெலாமுறுபனல்கொண்டுமடுவல்யிடும், நாடுகாடாகுமுயர்காடுநாடாகிவிடு நளிசகமேல்கீழதாய், நடைபூறுசந்தபல கூடுபூடனேக்கலைம நன்னிலவுமிருளாய் விடும், நீடுபகல்பாய்பின் பிறவாகுமிரவும்மார்நிறைபகற்போதாய்விடும், நிதியோர்மிடித்திடுவர் செழித்திடுவார்நிசமல்ல வாழ்வுகண்டாய், மாடுமனைபாரிசன மாணிதிபூஷணமு மருவுதனவாகுமன்றோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௩)

பிறந்தாற்பெறுபேறு.

சடமென்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று தன்பேர் விளங்கவேண்டும், சதிருடனில்லாது மெய்ஞ்ஞானியென்றவதரிக்கவேவேண்டுமல்லால், திடமினியரணசூர வீரனிவனென்னவே திசைமெச்சவேண்டுமல்லால், தேகியென்பவருக் கில்லையென்னுமலே செய்யவும் வேண்டுமல்லால், அடைவுடன்பலகல்வி யாராய்ந்துவித்துவா னாகவேண்டும், அறிவானதுரைமக்க ளாகவரவேண்டுமிகரதிகபூபாலரையா, வடகுவடுகிடுகிடென எழுகடலுமலையெறிய மணியுரகன் முடிகணெறிய, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எச)

வேசைநிந்தை.

தேடித்தம்வீட்டிற் பணக்காரர்வந்திடிற் றேகசீவன் போலவே, சினேகித்தவும்மையொரு பொழுதுகாணாவிடிற் சொல்லுறுதன்னமென்றே,'கூடிச்சுகிப்பரென் றாசையுன்மேலென்று கூசாமலாணையிடுவார், கொங்கையைவெடிக்கப் பிடிக்கக்கொடுத்திகழ் கொடுப்பார் சும்பனமுகப்ப, வேடிக்கைபேசியேகைமுதல்பறித்தபின் வேறுபடநிந்தைசெய்து, விடவிடப்பேசுவார் காயகலமுட்டியேவிட்டுத்துரத்திடுவார், வாடிக்கையாயிந்த வண்டப்பரத்தையர் பயக்கத்தை நம்பலாமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எரு)

இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதிவேல்வின் மனைக்குறுதிமனையாள் கவிக்குறுதிபொருளடக்கம், கன்னியர்தமக்குறுதி மனையாள் கவிக்குருதிகண்டிடிற்சத்யவசனம், மெய்க்குறுதிமுன்பின் சபைக்குறுதி வித்வசனம் வேசையற்குறுதிதேடல், விரகருக்குறுதிபெண்மூப்பினுக்குறுதியூண்வீரனுக்குறுதிதீரம், செக்குறுதினீருப்பார்க்குறுதிசெங்கோல் செழிப்படைகுறுதிவேழம், செல்வந்தனக்குறுதி பிள்ளைகணர்க்குறுதி சேர்ந்திடும் சர்ச்சனர்களாம், மெய்க்குறுதியாகி விழிக்குறமடந்தைசுரமங்கைமருவுந்தலைவனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (எசு)

வறுமையிற்சிறுமை.

வறுமைதான்வந்திடிற் றாய்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்றுமெண்ணாள், வாக்கிற்பிறக்கின்ற சொல்லெலாம்பொல்லாத வசனமாய்வந்துவிளையும், சிறுமையொடுதொலையா விசாரமேயல்லது சிந்தையிற்றைரியமில்லை, செய்யசபைதன்னிலே சென்றுவரவெட்கமாஞ் செல்வரைகாணினனும், உறுதிபெருவீரமுங் குன்றிடும்விருந்துவரி லுயிருடன்செத்தபிணமாம், உலகம்பழித்திடும் பெருமைபோர்முன்புசென் றொருவரொடுசெய்திசொன்னால், மறுவசனமுஞ்சொலாமுன்பினிற்றுன்பமிது வந்தணுகிடா தருளுவாய், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (எஎ)

தீச்சார்பானன்மையிழப்பு.

ஆனை தண்ணீரினிழல் பார்த்திடத் தலைசென்றங்கேகலக்கியுலவும், ஆயிரம்பேர்கூடிவீடுகட்டிடிலேத மறைகளுமுடனே வரும், ஏனைநற்பெரியோர்கள்போசனஞ்செயுமளவி லீக்கிடந்திசைகேடதாம் இன்பமிகுபகலிலேகன்றுசென்றாட்டுதற்கினியகேனது தடுக்கும், சேனைமன்னவரென்ன கருமமியமித்தலுஞ் சிறியோர்களாற்குறைபடும், சிங்கத்தையும்பெரிய ரிஷபத்தையுமபகைமை செய்ததொருதரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வ யானையுந்தழுவுமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௮)

இடையூற்றும் பயன்படுவை.

ஆறுதண்ணீர்வற்றி விட்டாலுமூற்றுநீர் முதுபானற்கொடுக்கும், ஆதவனையொருபாதி கட்செவிமறைத்தாலுமப்போதுமுதவிசெய்வன், கூறுமதிதேய்பிறையதாகவேகுறையினுங் குவலயத்திருள்சிதைக்கும், கொல்லைதான்சாவிபோய் விட்டாலுமங்குவறு குருவிக்குமேச்சலுண்டு, வீறுடனுதாரின்மிடி யானபோதியான்போதினிலு மிகநாடிவருடவாக்கு, வேறுகையில்லையென் றுரையாதின்றளவியத் துளமகிழ்ந்துதவுவான், மாறுபடுசூரகங்காரகப்பிரனே வடிவேலணிந்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௯)

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேதுமுதலிலா தவருக்கு லாபமேது, தலையிலா தவர்தமக்குறவேது பணமிலா தவற்கேதுவேசையுறவு, ஊரிலா தவர்தமக்கரமேது பசிவேளையுண்டிபாற்குருதிநிலையே, துணைமயிலாதவற் கரமேதுமுயல்விலார்க் குறுவதொருசெல்வமேது, சோர்விலாதவருக்கு மற்றுமொருபயமேதுசுகமிலாற்காசையேது, நற்குணமில்லாதவர்க் கெதிராளியேதிடர்செய் துஷ்டருக்கிரக்கமேது, மார்பவருவாலிமேல் வஸ்திரம்விடுத்தநெடு மால்மருகனுனமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (௮௰)

இதினுமிதுநன்றெனல்.

பஞ்சரித்தருவையறிவார் பொருளைசெய்தலிற் பலர்மனைப்பிச்சைநன்று, பரிவாகவுபசார மில்லாவிருந்தினிற் பட்டினியிருக்கைநன்று, தஞ்சமொருமுயலையடு வென்றுதனில் யானையொடு சமர்செய்துதோற்றனன்று, சரசகுணமில்லாத பெண்களைச்சேர்தலிற் சன்னியாசித்தனன்று, அஞ்சலாற்றங்களொடு நட்பாயிருப்பதனிலாருயிர் விடுத்தனன்று, வஞ்சகருடன்கூடிவாழ்தலிற்றனியேர வருந்திடுஞ்சிறுமைநன்று, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௮௧)

நிலையாதவை.

கொற்றவர்கள்ராணுவமுமாறுநேருகி குளங்கனிந்தாசியுறவும், குணமில்லாநேசமும் பாம்பொடுபழக்கமுங் குலவுநீர்விளையாடலும், பற்றலார்தமதிடை வருந்துவிசுவாசமும் பழயதாயாதிநிணரும், பரதாரமாதரது போகமும் பெருகிவரு பாங்கான வாற்றாவும், நற்றுமொருதுற்புத்தி கேட்கிறபேருறவு நல்லமதயானைநட்பும், நாவினல்லுறவுமொரு நாள்போலிரால்வகைகண்பப்படாதுகண்டாய், மற்றுமொருதுணையில்லை நீ துணையெனப்பரவும் வானவர்கள் சிறைமீட்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே.

நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையுங் குயில்சென்றுமாங்கனிவிருப்பமொடுதேடிநாடும், யிடைகருங்காகங்களெருக்கனியிருந்தாலும்வேப்பங்கனிக்குநாடும், எக்காலுங்கரிவண்டு பங்கேருகத்தினிலிருக்கின்றதேனைநாடும் எத்தனைசுகந்தவகை யுற்றாலுமறுநள்வண்டினங்துர்மலத்தைநாடும், ஈக்கோர்பொருட்பவை நயங்களெங்கேயென்று தாம்பார்த்துக்கொள்வார், தாழ்வானவன்கண்ணிற் குற்றமெங்கேயென்றுதமிழிலாராய்வர்கண்டாய், மைக்கரவிழிமாது தெய்வானையுங்குறவர் வள்ளியுந்தழுவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௮௩)

தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலுமாமுகிலொதுங்குதலும் விரிசிலைகுனிந்திடுதலும், மேடமகதன்றிடலும் யானைகளொடுங்குதலும் வெள்விடைகள் துள்ளிவிழலும், மூங்கில்கள்வணங்குதலும்மேல்வரிணங்குதலு முனிவர்சணயந்துகொள்ளும், முதிற்படையொதுங்குதலும் விளைஞர்களடங்குதலுமுதலினற்பயந்திடுதலும், ஆங்காரவுசாய்குதலுமகிழ்மலருடைத்தலு மயற்குழல்சூடுபடுதலும், அம்புவியிலிவைகாரியங்களுக்கெல்லா மதனுலிளைப்புவருமோ, மாங்கனிக்காவானை வலமதுபுரிந்துதளர் மதகரிக்கிளையமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௮௪)

தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற் புராரெண்டிருந்திடத் துறவுகண்டேவேடுவன், தோலாமலம்பெய்ய வேணுமென்றுருகணைதொடுத்துவில்வாங்கிநிற்க, ஊடாடிமேலே யெழும்பிடிலடிப்பதற் குலவுராசாளிகூட, உயரப்பரந்துகொண்டேதிரியவப்போதுதைதக்கசிலைவேடனடியில்சோடாவவ்விஷந் தீண்டவேயவன்விழச் சிலையிற்றொடுத்தவாளி, சென்றுராசாளிமெய் தைத்துவிழவவ்விரு சிறைப்புறாதாழ்ந்தவன்றோ, வாடாமலிவையெலாஞ் சிவன்செயலல்லாதன் மனச்செயலினாலும்வருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைசக ளடிதொடைகள்சிதையாதிருக்கவே வேண்டுமெப்பால், ஈரைம்பொருத்தமொடு மதுரமாய்பளபளப் பினியசொற்கமையவேண்டும், அழுத்தமிகுதுளிரனுக்கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும், அன்பானபாவின மிசைந்துவரல்வேண்டுமுனலங்காரமுற்றதுறையில், பழுத்துளமுவந்தோசை யுற்றுவரல்வேண்டும் படிக்குமிசைகூரல்வேண்டும், பாங்காகவின்னவைபொருந்திடச்சொற்கவிதை பாடிச்சிறப்பென்பர்காண், மழுத்தினஞ்செங்கைதனில்வைத்தகங்காளனருண் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௬

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடுசிவசிவா வென்றுதிருநீற்றைப் பரிந்துகையாலெடுத்துப், பாரினில்விழாதபடி யண்ணாந்துசெவியொடு பருத்தபுஜமீதிலொழுக, நித்தமூவிரல்களா னெற்றியிலழுந்தவுற நினைவாய்த்தரிப்பவர்க்கு, நீடுவினையணுகாது தேகபரிசுத்தமாய் நீங்காமநிமலனங்கே, சத்தியொடுநித்தம்விளையாடுவன்முகத்திலே தாண்டவஞ்செய்யுந்திரு, சஞ்சலம்வாராதுபரகதியுதவுமிவரையேசத்தியுஞ்சிவமென்னலாம, மததினியமேருவென வைத்தமுதினைக்கடையுமான் மருகனனமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுலவயனீடு மலைமேவுகுமரேசனே.

விபூதிவாங்கு முறைமை.

பரிதனிலிருந்துவியல் சிவிகையிலிருந்துமுயர்பலகையிலிருந்துமிகவே, பாங்கானவம்பலந் தனிலேயிருந்தும் பருத்ததிண்ணையிலிருந்தும், தெளிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்கமேநின்று திருநீறுவாங்கியிடினும், செங்கையொன்றாலும்விரன மூன்றாலும்வாங்கினுந் திகழ்தம்பலத்தினோடும், அரியதொருபாதையி னடக்கின்றபோதினுமசுத்தனிலமானவதிலும், அங்கேதரிக்கினும் தந்திடிற்றள்ளினுமவர்க்குநரகென்பர்கண்டாய், வருவிழிமடந்தைகுறவள்ளிநாயகிதனை மணந்துமகிழ்ஜகநாதனே, மயிமேலறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௮௮

இவ்வுருப்பாற் பயனில்லெனல்.

தேவாலயஞ்சுற் றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண், தினமும்மநினகமலபாதத்தைநினையாத சிந்தைதானென்னசிந்தை, மேவாகமஞ்சிவ புராணமவைகேளாமல் விட்டசெவியென்னசெவிகாண், விமலனைவணங்காத சென்னியென்சென்னிபணிவிடைசெயாக்கையென்னகை, நாவாரநினையேத்திடாதவாயென்னவாய்நற்றீர்த்தமூழ்காவுடல், நானிலதனென்னவுடல் பாவியாகியசனனநண்ணிற்பலனேதுகாண், மாவாகிவேலைதனில் வருசூரன்மார்புருகவடிவேலைவிட்டமுருகா, மயிமேலறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௮௯

நற்பொருளொடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனகமங்கையுடன்மூத்தவள்பிறந்தென்ன குலவுமாட்டின் கணவர்தான், கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும்பாசியுற்றுமென்ன, மாகருணுமமுதினொடு நஞ்சம்பிறந்தென்ன வல்லிரும்பிற்றுருத்தான், வந்தேபிறந்தென்ன தொடுமரந்தனின்மொக்குள் வளமொடுபிறந்தென்னவுண, பாதமிதுசென்னலொடு பதர்தான்பிறந்தென்ன பனுமொருதாய்வயற்றிற, பண்புறுவிவேகியொடு கயவர்கள்பிறந்தென்ன பலனேதுமில்லையன்றே, மாகனகமேருவைச் சிலையெனவளைத்தசிவன் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௰

தன்னிலத்தாலழிவு.

குலமானசம்மட்டி குறடுகைக்குதவியாய்க் கூரிரும்புகளைவெல்லும், கோடாலிதனுளே மரமதுநுழைந்துதன் கோத்திரமெலாமழிக்கும், நலமானபார்வைசேர் குருவியானதுவந்து நண்ணுபரவைகளையாக்கும், நட்புடன்வளர்ந்தகலை மானென்றுசென்றுதன்னவில்சாதிதனையிழுக்கும், வளவுநற்குடிதனிற் கோளகனிநந்துகொண்டுற்றுரையிடழிபபார், உளவனிலலாமலூ ரழியாதெனச்சொல்லுமுலகமொழிநிசமலலவோ, வலமாகவந்தவனிடத்தினிற்கனிகொண்ட மதயானைதனசோதரா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௧

வீணுக்குழைத்தல்.

குயில்முட்டைதனைதென்றுகாக்கையயைகாக்குங்குணம்போலுமீக்களெல்லாம், கூடியேதாமுண்ண வேண்டுமென்றேதினங்கூடியத்தநறவுபோலாம், பயில்சோரருக்குப் பிறந்திடந்தாமம்பற்றபாலனைனருட்கருதியே, பாராட்டிமுத்தமிட் டனபாய்வளர்த்திடும் பண்பிலாபுருஷாபோலும், துயிலின்றிநிதிகளைத் தேடியேயொருவர்பாற்றொட்டுததெறிந்திடாமல், தொகைபண்ணிவைத்திடுவர் கைகொண்டுபோகவரு சொந்தமானவரவேறுகாண், வயிரமொடுசூரனைச்சங்காரமேசெய்து வானவர்க்குதவுதலைவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௨

இதுசேரினிதுபயன்படாதெனல்.

அழலுக்குள்ளேவிட்ட நெய்யும்பெருக்கான வாற்றிற்கரைத்தபுளியும், அரிதானகயவரிற் கவிழ்த்திட்டபாலும் வருமலகைகட்கிடுபூசையும், சுழல்பெருங்காற்றினில வெடித்தபஞ்சும்மணற் சொரிநறும்பனிநீரினில், சொலலெலறியகாட்டுக் கெறித்தநிலவுங்கடல்சுழிக்குளேவிடுகப்பலும், விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமுகமாய்வசைக்களித்தபொருளும, வீணருக்கேசெய்த நன்றியும்பலனில்லை விருதாவிலென்பர்கண்டாய், மழலைப்பசுங்கிளளை முன்கைமலைமங்கைவண்ணணக்குழந்தைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௩

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற்றங்களையு மற்றநாண்முதலா வடுத்துவருபழையோரையும், அடுபகைவரிற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்பானபெரியோரையும், தன்னைநம்பினவரையு மேழையானவரையுஞ் சார்ந்தமறையோர்தம்மையும், தருணமிதுவென்றுநல் லாபத்துவேளையிற் சரணம்புகுந்தோரையும், நன்னயமதாகமுன் னுதவிசெய்தோரையு நாளுந்தனக்குறுதியாய், நத்துசேவகனையும் காப்பதல்லாதுகை நழுவிவிடலாகாதுகாண், மன்னயிலுமினியசெஞ் சேவலுஞ்செங்கைமலர் வைத்தசரவணபூபனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௪

தகாதசெயல்.

அண்டிவருமுற்றார் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோரும், ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பி னற்பரையடுத்தபேரும, கொண்டவொருமனையா ளிருக்கப்பரத்தையைக் கொண்டாடிமருவுவோரும், கூறுசற்பாத்திரமிருக்கமிதுதானமது குணமிலார்க்கீய்ந்தபேரும், கண்டுவருபுதியோரை நம்பியேபழையரைக் கைவிட்டிருந்தபேரும், கரிவாலைவிட்டுநரிவால்பற்றிநதிநீர் கடக்கின்றமரியாதைகாண், வண்டடர்கடப்பமலர்மாலிகாபரணமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௫

நல்லோர்முறை.

கூடியேசோதரர்கள்வாழ்தலாலுந்தருகுழந்தைபலபெருதலாலும், குணமாகவேபிச்சையிட்டுண்டுமையாலுங்கொடும்பிதிர்க்கிடுதலாலும், தேடியேதெய்வங்களுக்கீதலும் தியாகங்கள்கொடுத்தலாலும், சிறியோர்கள்செய்திடும பழைபப்பொருத்துச் சினத்தைத்தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கிடுதலாலுமிக நல்வார்த்தைசொல்லலாலும்,நன்மையேதருமலாற்றாழ்ச்சிகள்வராவிவை நல்லோர்கள்செயுமுறைமைகாண், வாடிமனநொந்துதமிழ்சொன்னநற்கீரன்முன் வாதுதவிசெய்தமுருகா, மயிமேலறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலெனுநாயினுட றருவனசுமந்துமுன் னூற்றைக்கடத்துவித்தான, அடைக்கலமெனுங்கயற் காகனெடுமாலுட னருச்சுனன்சமர்புரிந்தான், தஞ்சமெனவந்திடு புறவுக்குமுன்சிபி சரீரந்தனைக்கொடுத்தான், தடமதலைச்சிரகரிந்தயனைமுன்காக்கத் தசீதுமுதுகெலும்பளித்தான், இஞ்சொலுடனேபூகதயவுடையராயினோரெவருக்குமாபத்தில்லை, இனியதஞ்சீவனைவிடுத்தாகிலுங்காத்திரங்கிரட்சிப்பரன்றோ வஞ்சகிரவுஞ்சமொடு தாருகன்சிங்கமுகன் வளர்சூரனுடல்கீண்டவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௩௭

யோக்கியா யோக்கியம்.

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகிநீர்சேரிலென்னும், பவளத்தினிடைமுத்தை வைத்திடிற்சோபிதம் படிகமணிநோக்கிலென்னும், மேலினியமன்னர்பால் யானைசேர்வதுகனதை மேஷமதுசேரிலென்னும், மிக்கானதங்கத்தி னவமணியுரிற்பெருமை வெண்கல்லழுத்திலென்ன, வாலிபமினார்களுடனிளையோர்கள்சேரினலம் வளைகிழவர்சேரிலென்னும், மருவுநல்லோரும்மாலிகைதரித்தமணிமார்பனேதெய்வானை வள்ளிக்குவாய்த்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௮

பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல் பெரியோரிசொல்வழிநிற்ற லாபத்தின் வந்தபேருக், கபயங்கொடுத்திடுத னல்லினஞ்சேர்ந்திடுதலாசிரியன் வழிநின்றவன், சொன்னமொழிதவாதுசெய்திடுந்தாய்தந்தைதுணையடியருச்சனைசெயல், சோமடவில்லாமனுயிர் போகினும் வாய்மைபொழிதொல்புவியினாட்டிவிடுதல், மன்னரைச்சேர்ந்தொழுகல்கற்புடையமனைவியொடு வைக்கினுந்தாமரையிலை, மருவுநீரெனவுருத லிவையெலாமேலவர்த மாண்பென்றுரைப்பரன்றோ, வண்மையின்மேவர்க்கிவ்வுலகமொருநொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௯

நூலின்பயன்.

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுண் மலைமேலுகந்தமுருகா, வள்ளிக்கொடிக்கினிய வேங்கைமரமாகினோன்வானவர்கள்சேனாபதி, கன்னன்மொழிமையாடிருப்புதல்வனரன்மகன்கங்கைபெற்றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெஞ்ஞான தேசிக்கடவுளாவினன்குடியினான், பன்னரியபுல்வயலில் வாலகுமரேசர்மேற் பறிந்து குருபாததாசன், பாங்கானதமிழாசிரிய விருத்தத்தினரைபாடலொருநூறுகோடி, நன்னயமதாகப்படித்தபேர்கேட்டபேர் நாடொறுங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும்பெருவரே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௱

குமரேசசதகம் முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் றிருவடிவாழ்க.
